# செயலட்டை – தமிழ் (02)

## பிரமி கல்வி நிலையம்

**S. மோகன் 0779685514**

மாணவர் பெயர் : ..................................

**அறிவுறுத்தல்.**

* **இடைவெளிக்கு பொருத்தமான எழுத்து / சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.**

01) ஆற்று ......................... ( வெள்ளம் / வெல்லம் ) வீட்டினுள் புகுந்தது.

02) கொடியில் திராட்சைப்பழக் ............. (குழை / குலை ) தொங்கியது.

03) இ ...... பம் ( ன் / ண் / ந் )

04) வா ..... ப்பழம் ( லை / ளை / ழை )

05) காற்று வேகமாக ....................... ( வீசியது / வீசின )

06) மீன்கள் குளத்தில் ....................... ( நீந்தியது / நீந்தின )

07) மரம் காற்றில் ஆடி ..................... ( அசைந்தது / அசைந்தன )

08) நான் தம்பியுடன் கடைக்குச் .................... ( சென்றோம் / சென்றேன் )

09) மாமா .................. ( பேரூந்து / பேருந்து ) வண்டியில் இரத்தினபுரிக்கு சென்றார்.

10) நாங்கள் பொலன்னறுவை .................. ( நகருக்குச் / நகறுக்குச் ) சென்றோம்.

11) அப்பா பகல் உணவை உண்ட பின்னர் வேலைகளைச் ......... ( செய்தாள் / செய்தார் )

12) மக்கள் தென்னை மரங்களை ......................... ( வெட்டினர் / வெட்டினோம் )

13) மலை முகட்டில் ..................... ( பனி / பணி ) படர்ந்திருந்தது.

14) மிளகாய்ச் செடி .................... ( செளித்து / செழித்து ) வளர்ந்தது.

15) ........................... ( கலகல / தகதக ) என நெருப்பு எரிந்தது.

16) இரட்டைக் கொம்பும் அரவும் கொண்டமைந்த சொல் ....... (வேம்பு / எருமை / கோழி )

17) மடக்கேறும் அரவும் கொண்டமைந்த சொல் ........ ( பூனை / நூதனசாலை / துன்பம் )

18) நான்................ ( வந்தேன், வந்தோம் )

19) நாம்................ ( படிக்கிறேன் , படிக்கிறோம் )

20) நாங்கள்............ (ஓடுவோம் , ஓடுவீர் )

21) நீ.................. ( பார்த்தாய் , பார்த்தீர்கள் )

S. MOHAN

22) (கால் , கால்கள் )………………. முறிந்தது.

23) (தேனீ , தேனீக்கள் )…………… மொய்த்தன.

24) (கத்தரி, கத்தரிகள் )………………… பூத்தது.

25) (வாள், வாள்கள்)………………… அறுத்தன.

26) ஆற்றங் ………… யில் ஒரு பெரிய ஆலமரம் உள்ளது. (கறை, கரை)

27) இந்தப் பூமியைச் சுற்றி ………………… மண்டலம் உள்ளது. (வளி, வலி, வழி)

28) மோகன் தாகந் தீரக் குளிர் ……………. குடித்தான். (பாணம், பானம்)

29) ………… மப்பும் மந்தாரமுமாய் இருண்டு காணப்பட்டது. (வாணம், வானம்)

30) அவன் எய்த ………….. பட்டு மான் கீழே விழுந்தது. (பானம், பாணம்)

31) பாடசாலையின் முதலாவது மணி ……… சில நிமிடங்களின் முன்னர் கேட்டது. (ஒளி, ஒலி, ஒழி)

32) மரங்கள் சரிந்து………………… (விழுந்தது, விழுந்தன)

33) சூரியன் காலையில்…………….. (உதித்தது, உதித்தன)

34) அந்திவானம் செந்நிறமாகக் ……………. (காணப்பட்டது, காணப்பட்டன)

35) சேவல் அதிகாலையில் ……………. (கூவின, கூவியது)

36) அணில் மாமரத்தில் ……………. (ஏறின, ஏறியது)

37) காடுகளை ……….. ப்பதினால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது. (அளி, அலி, அழி)

38) அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு மாடியிலிருந்து ………… (இரங்கினர், இறங்கினர்)

39) உடையில் இருந்த இரத்தக் …... அவன் செய்த குற்றத்தைக் காட்டிக் கொடுத்தது. (கறை, கரை)

40) அவளது நிலைமையைக் கண்டு அங்குள்ள அனைவரும் ……………. (இரங்கினர், இறங்கினர்)

41) நீங்கள் ……………. (செய்கிறாய், செய்கிறீர்கள்)

42) சிறுவன் ……………. (கூறினான், கூறினார்)

43) சிறுமி ……………. (கழுவினாள், கழுவினார்)

44) யானை ……………. (எழுந்தது, எழுந்தன)

45) கைகள் ……………. (உயர்ந்தது, உயர்ந்தன)

46) ………….. உறக்கமின்றிப் பாடுபட்டு உழைத்த காரணத்தால் அவன் இன்று பணக்காரனாக இருக்கிறான். (ஊன், ஊண்)

47) (பல், பற்கள்) …………….விழுந்தது.

48) (பந்து, பந்துகள்) …………….விழுந்தன.

49) (குயில், குயில்கள்) …………….கூவின.

50) (சில்லு, சில்லுகள்) …………….உருண்டன.

51) சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி ……….. ந்தன. (ஒலி, ஒளி, ஒழி)

52) சூரியனது ………… உட்புகாத மரங்கள் அடர்ந்த காடு அது. (ஒளி, ஒலி, ஒழி)

53) (மான், மான்கள்) …………….ஓடியது.

54) (வீடு, வீடுகள்) …………….இருந்தன.



S.MOHAN

55) காகம் அங்குமிங்கும் …………… தேடியது. (இரை, இறை)

56) சுதந்திர தின விழாவின் போது …………… வேடிக்கைகள் காட்டப்பட்டன. (வான, வாண)

57) காகம் குஞ்சுகளுக்கு இரை ………. (கொடுத்தன, கொடுத்தது)

58) உணவு உண்ட பின் சிறிது நேரம் ............. வது உடம்புக்கு நல்லது. (உலவு / உளவு)

59) தந்தை தாய் .............. என்பது முழுமொழி ஆகும் (பேன் / பேண்)

60) அவ்விடத்தில் அள்ள அள்ளத் தண்ணீர் ............ க் கொண்டே இருந்தது. (ஊறி / ஊரி)

61) சிறுவர்கள் கடற்கரையில் ............. களைப் பொறுக்கி விளையாடினர். (ஊரி / ஊறி)

62) மலை நாட்டில் ................. மூடியிருந்தமையால் கடுங்குளிராக இருந்தது. (பணி / பனி)

63) உலகப் .................. (புகல் / புகழ்) பெற்ற ஓவியங்களுள் முதன்மையானது மோனாலிசா ஓவியமாகும்.

64) ஒவ்வொரு விளையாட்டுக் குழுவினரும் தத்தம் ................ (சீறுடைகளில் / சீருடைகளில்) நின்றனர்

65) வானில் ...................... (நட்சத்திரங்கள் / நட்சச்த்திரங்கள்) மின்னிக் கொண்டிருந்தன.

66) பரீட்சைப் ...................... (பெறுபேறுகள் / பெருபேறுகள்) துரிதமாக வெளிவருவதற்குக் கணினி துணை புரிகிறது.

67) விளையாட்டு வீரர்கள் ....................... (உறுதிமொளி / உறுதிமொழி) எடுத்துக் கொண்டனர்

68) கண்களில் இருந்து கண்ணீர் ...................... (கசிந்தது / கசிந்தன)

69) விளையாட்டுக்கள் ...................... (ஆரம்பமாகியது / ஆரம்பமாகின)

70) ஒலிம்பிக் போட்டிகள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை ...................... (நடைபெறுகின்றது / நடைபெறுகின்றன)

71) அந்த நீர் சுவையும் மணமும் ......................(கொண்டிருந்தது / கொண்டிருந்தன)

72) மூதுரையில் நல்ல ஒழுக்க ...................... (நெறி / நெறிகள்) பல கூறப்படுகின்றன.

73) மகனின் சாதனையைக் கேள்வியுற்ற தாய் உச்சி குளிர்ந்தாள். உச்சி குளிர்தல் என்பதன் கருத்து ...................... (மிகமகிழ்தல் / இன்பதுன்பம்) என்பதாகும்.

74) மழை விடாது பெய்தமையால் நீர் கங்குகரையின்றிப் பாய்ந்தோடியது. கங்குகரையின்றி என்பதன் கருத்து ……………. (மிக வேகமாக / அளவில்லாதது) என்பதாகும்.

75) அவர்கள் இருவரும் கீரியும் பாம்பும் போலவே இருப்பார்கள். கீரியும் பாம்பும் போல என்ற உவமைத் தொடரின் கருத்து ...................... (இணைபிரியாமல் / பகையுணர்வுடன்) என்பதாகும்

76) வகுப்பில் முதல் மாணவனாக வரவேண்டும் என்ற குமரனின் ஆசை கைகூடியது. கைகூடுதல் என்ற மரபுத் தொடரின் பொருள் ...................... (நிறைவேறுதல் / அறிவு உண்டாதல்) என்பதாகும்.

77) அத்திபூத்தாற்போல் மாமா இன்று வீட்டுக்கு வந்திருக்கிறாரே. அத்திபூத்தாற்போல என்ற உவமைத் தொடரின் கருத்து ...................... (மிக அரிதாக / மிக மகிழ்ச்சியாக) என்பதாகும்.

78) பயிரை அழிப்பது ................................ (கலை / களை)

79) வீரனிடமுள்ளது ................................ (வால் / வாள்)

80) பசு மேய்வது ................................ (புல் / புற்)

81) காட்டில் வளர்வது .................................. (மறம் / மரம்)

82) வீட்டுக்கு இருப்பது .................................. (கூரை / கூறை)

83) (எண்ணை / எண்ணெய்) …………சத்துள்ள உணவை மிகையாக உண்பதைத் தவிர்த்தல் நல்லது.

84) அடிக்கடி ……………. (காச்சல் / காய்ச்சல்) ஏற்படுவது உடல் நலக் குறைவினால் எனலாம்.

85) (கைமாறு / கைம்மாறு) ……………. கருதாமல் பிறருக்கு உதவுவது நன்று.

86) உணவு உண்ணுமுன் ……………. (சவுக்காரம் / சவர்க்காரம்) இட்டுக் கழுவுவது நல்லது.

87) தொழிலாளி நெற்றி ……………. (வியர்வை / வேர்வை) நிலத்திலே சிந்த உழைத்தான்.

88) ஏழைக்கு என்றும் .................................... (இரங்கு / இறங்கு)

89) இரவில் நன்றாய் .................................... (உரங்கு / உறங்கு)

90) கறிக்குச் சேர்ப்பது .................................... (புழி / புளி)

91) வீரத்தின் மறு பெயர் .................................... (மறம் / மரம்)

92) .................................... (சுற்றாடலை / சுற்ராடலை)ச் சுத்தமாக வைத்திருப்போம்.

93) ஆனைக்கும் அடி .................................... (சருக்கும் / சறுக்கும்)

94) விடாமுயற்சி .................................... (பலன் / பழன்) தரும்.

95) சிறுவர்கள் .................................... (கடற்கரையில் / கடற்கறையில்) விளையாடினார்.

96) சூரியனிடமிருந்து கிடைப்பது .................................... (ஓலி / ஒளி)

97) நாம் நல்ல கருத்துக்களை .................................... (அரிய / அறிய) வேண்டும்.

98) .................................... (வானம் / வாணம்) மப்பும் மந்தாரமுமாய்க் காணப்பட்டது.

**அறிவுறுத்தல்.**

* பொருத்தமான சொற்களைத் தெரிந்து வெற்றிடங்களை நிரப்புக.

01) **அங்குமிங்கும், எமது, வாழ்க்கை, பாதுகாப்பதற்கு, பயணிக்கிறோம்**

இயற்கையைப் பேணிப் (1) …………………………………….. மனிதர்கள் ஒத்துழைப்பதில்லை. இவ்வாறான செயல்களால் (2) ………………………………… இருப்பிடத்தை விட்டு நாம் விரட்டப்பட்டுள்ளோம். பூக்களைத்தேடி நீண்ட தூரம் (3) ……………………………………… உணவிற்காக வாழ்நாள் முழுவதும் (4) …………………………….. அலைகிறோம். அதனால் எமது (5) …………………………………….. கடினமானதாகிவிட்டது.